செ.வெ.எண் -02 நாள்:01.03.2018

**அரியலூர் மாவட்டத்தில் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (01.03.2018) நேரில் பார்வையிட்டார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் இன்று நடைபெறும் 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு 01.03.2018 முதல் 06.04.2018 வரை நடைபெற உள்ளது. அத்தேர்வில் 72 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகள் 30 தேர்வு மையங்களில் தேர்வெழுத உள்ளனர். இதில் 3850 மாணவர்களும், 4561 மாணவிகளும் ஆக மொத்தம் 8411 மாணவ-மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர்.

மேலும், 12-ம் வகுப்பு தேர்விற்கான வினாத்தாள்கள் கட்டுகாப்பு மையங்களான அரியலூர் மற்றும் உடையார்பாளையம் மாவட்டக்கல்வி அலுவலகத்தில் ஆயுதம் தாங்கிய காவலர்களின் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டுகாப்பு மையத்திற்கும் மாவட்டக்கல்வி அலுவலர் தலைமையில் 1 தலைமை ஆசிரியர், 1 முதுகலை ஆசிரியர் கட்டுகாப்பாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வு நடைபெறும் 30 தேர்வு மையங்களுக்கும் முதன்மைக்கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள் மற்றும் 70 நிலையான உறுப்பினர்களாக பறக்கும் படை உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வுப்பணிகள் சார்ந்து தேர்வு நடைபெறும் நாட்களில் தடையில்லா மின்சாரம் வழங்கவும், மாணவ / மாணவிகள் குறித்த நேரத்தில் தேர்வு மையத்திற்கு தேர்வெழுத ஏதுவாக போதிய பேருந்து வசதியும், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேர்வுகள் அமைதியாக நடைபெற ஒவ்வொரு தேர்வு மையத்திற்கும் ஒரு ஆயுதம் தாங்கிய காவலர் உட்பட போதிய காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர்.அ.புகழேந்தி மற்றும் ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.